2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 5

## பயிற்சி 2

பெயர் ______________________________

*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**

உனது நண்பன்/நண்பி பற்றி விவரித்துச் சொல்லவும்.

2. **வாசித்தல்**

ஒரு நாள் விவசாயி தான் கட்டி இருந்த கைக்கடிகாரத்தைத் தன் குடிசைக்குள் தொலைத்து விட்டார். அது அவரது திருமண நாளன்று மனைவி அவருக்கு ஆசையாகப் பரிசளித்த கைக்கடிகாரம். அவர் அந்த இடத்தைச் சுற்றித் தேடிப்பார்த்துவிட்டார். அவருக்கு அந்தக் கைக்கடிகாரம் கிடைக்கவில்லை. நிலத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தனர். அவர்களை அழைத்து தன் கைக்கடிகாரம் தொலைந்துவிட்டது. அதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு நல்ல பரிசு ஒன்று கொடுப்பேன் என்றார். சிறுவர்கள் ஆர்வமுடன் குடிசைக்குள் சென்று தேட ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் அவர்கள் வெளியே வந்து தங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டனர்.
ஒரு சிறுவன் மட்டும் மீண்டும் வந்து எனக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுங்கள் நான் தேடித் தருகிறேன் என்றான். விவசாயியும் சம்மதித்தார்.
குடிசைக்குள் சென்ற சிறுவன் சிறிது நேரத்தில் கைக்கடிகாரத்துடன் வெளியே வந்தான். அதைப் பார்த்த விவசாயி ஆச்சரியத்துடன் எப்படி உன்னால் மட்டும் கண்டுபிடிக்க முடிந்தது என்று கேட்டார்.
“நான் உள்ளே சென்று தரையில் அமைதியாக உட்கார்ந்து காதுகளைக் கூர்மையாக்கி எந்தத் திசையில் இருந்து டிக் டிக் சத்தம் வருகிறது என்று கேட்டேன். பிறகு சுலபமாக கண்டுபிடித்து எடுத்து வந்தேன்”, என்றான்.

<u>நிறுத்தற் குறிகள்</u>

**முற்றுப்புள்ளி** **.** **(Period, Full Stop)**

- சொல்லியத்தின் முடிவில் இடம்பெறும்.
- சொற்குறுக்கம் ( திரு. )
- பெயர்க்குறுக்கம் ( த. எழிலன் )

**காற்புள்ளி** **,** **(Comma)**

- பட்டியலிடும்போது
- முகவரி இடும்போது
- சொல்லியத்தில் பொருள்மயக்கத்தை தெளிவுபடுத்த
- விளிப்பெயர்களை அடுத்து
- ஆனால், ஆயின், ஆகையால், எனவே போன்ற சொற்களுக்குப் பின்

**வினாக்குறி** **?** **(Question Mark)**

- வினாச்சொல்லியத்தின் முடிவில் இடம்பெறும்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**வியப்புக்குறி** ! (Exclamation Mark)

- உணர்ச்சிகளை (மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல்) உணர்த்தும் சொல்லை அடுத்து இடம்பெறும்.

**அடைப்புக்குறி** ( ) (Parenthesis, Brackets)

- எழுத்துப்பகுதியின் இடையே மேற்கோள்கள் அல்லது விளக்கத்தினை உண்டாக்குவதற்காக இடம்பெறும்.
- ஆக்கங்களுக்கு இடையில் ஒரு சொற்றொடரின் விளக்கத்திற்காக பிறமொழியினைப் பயன்படுத்தும்போது அது அடைப்புக்குறிக்குள் இடம்பெறும்.

**இரட்டை மேற்கோள்குறி** “ “ (Quotation Mark)

- ஒருவர் கூறியதை மேற்கோள் காட்டும்போது இடம்பெறும்
- நேர்கூற்றிற்கு முன்னும் முடிவிலும் இடம்பெறும்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

### 3. நிறுத்தற்குறிகளுடன் எழுதவும்

ஒரு ஊரில் மாறன் குயிலி எழிலன் தமிழினி ஆகிய நால்வரும் சிறந்த நண்பர்கள் ஒரு நாள் மாறன் மற்றவர்களைப் பார்த்து இன்று நாம் கோவில் திருவிழாவிற்கு சென்றுவருவோம் என்றான் அதற்கு தமிழினி இன்று என்ன விசேடம் மாறன் எனக் கேட்டாள் இன்றுதான் சாமி உலாவருகிறார் என்று பதிலளித்தாள் குயிலி ஹையா எனக் குதித்தான் எழிலன் நால்வரும் மகிழ்ச்சியுடன் தங்கள் தாய் தந்தையரிடம் அனுமதி பெறுவதற்காக தத்தமது வீடு நோக்கி ஓடினார்கள்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

4. **பின்வரும் சொற்களைத் தமிழில் எழுதுவோம்.**

- We go to school.

______________________________________________

- We are going to the library.

______________________________________________

- We are not going to that hotel.

______________________________________________

- We can go to the market.

______________________________________________

- I read books.

______________________________________________

- I am driving a car.

______________________________________________

- I am doing my homework.

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**5. பின்வரும் தலைப்புகளுக்குப் பொருத்தமான பந்தியை எழுதவும்.**

<u>கோடை காலம்</u>

<u>எனக்குப் பிடித்த இடம்</u>

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்
Reading Tamil School